தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ௵ கார்த்திகை ௴ 25௳ (10-12-'22.) | ப. 32

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 335
(உதவி பத்திராதிபர்)

2. சாரதா ஸல்லாபம் 336
(சாரதா)

3. திருநீலகண்டத்துக்குயவனார் ... 337
(துகளள் எழுதியது)

4, நமது பண்டைப் பெருமையும், தற்கால வாழ்வும் ... 338
(B. ராமஸ்வாமி)

5. சோதிடப்புலி சோணாசலம் ... 340
(ராம சந்திரர்)

6. புயற் காற்று ... 341
(V. நாராயணையர், M.A., M.L.)

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்
எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல, ஒற்றைத் தலைநோய், விக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.
டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

உம்மிடி
ராமய்யசெட்டி
குருசாமிசெட்டி
கம்பெனி

நம்பிக்கையான நகை வர்த்தகர்கள்
25, சைனாபஜார் ரோட், மதராஸ்

ఉమ్మిడి రామయ్య శెట్టి, గురుసామి శెట్టి
కంపెనీ
నగల వర్తకులు
25, చైనా బజార్ రోడ్డు, మదరాసు.

பணம் திருப்பி
கொடுக்கலாம்

ஒரு வருஷம் எங்கள் நிபந்தனையின்படி படிப்பவர்கள் இங்கிலீஷ் பாஷையில் குறைந்தபக்ஷம் 4-வது பாரம் வரையுள்ள படிப்பாவது அடையலாம்.

ஜோலிக்கு இடையூறில்லாமல் தங்கள் வீட்டிலிருந்தே கற்றுக்கொள்ளலாம்.

எப்பொழுதும் முன் பணமாக

வருஷசந்தா ரூ 10—8—0

புஸ்தகங்கள் ஒரே மொத்தமாக கொடுக்க மாட்டோம். எங்கள் ஸ்தாபனத்தில் ஒரு வருஷத்திய படிப்பை யடைந்தவர்களுக்கும், 4-வது பாரம்வரை படித்தவர்களுக்கும் 3வருஷம் கொண்டு பல விதத்திலும் இந்தியன் யூனிவர்ஸிடி B.A. பரீக்ஷைக்கு சமமான லண்டன் மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்கு சேருவதற்கு நாங்கள் மாணுக்கர்களை தயார் செய்கிறோம்.

ஏராளமான கம்மிஷனுக்கு வேலைசெய்ய ஏஜெண்டுகள் தேவை.

E. C. School,
Trivandrum.

இந்த பேப்பரின் பெயர் சொல்லிவரக் கூடிய ஆர்டர்களுக்கு சந்தா தொகையில் அணு எட்டு குறைவு செய்யப்படும்.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமிமுதலியார் எழுதியது

		ரூ.	அ.
இந்திரா பாய்	...	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்			
சுந்தர சிங்	...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை			
அம்புஜாக்ஷி	...	2	0

வி. நாராயணன் கம்பெனி,
4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

சிலப்பதிகாரக் கதை

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஐந்துகளுள் ஒன்றுக விளங்கும் சிலப்பதிகாரம் என்னும் பழைய நூல் காவிரிப்பூம் பட்டினத்து வணிகனுகிய கோவலன் அவன் மனைவி கண்ணகி என்னுமிவர்கள் சரித்திரத்தை விரித்துக்கூறும் அழகிய நூலாகும். அரசர் தமது நீதியில் சிறிது தவறினும் உயிர் வாழாரென்பதையும், கற்புடைய மகளிரை மக்களேயன்றித் தேவரும் முனிவரும் கைதொழுதேத்துவ ரென்பதையும், முன்னர் செய்த இருவினையும் செய்தமுறையே செய்தோனை நாடி வந்து பின்னர் உருக்கொண்டு நின்று நுகர்விக்குமென்பதையும், யாவரு மறிந்துய்யக் கருதி, கதை கூறுமுகத்தானே, இம்மூன்று உண்மைகளும் சிலம்பு காரணமாகப் பெறப்படுதலின் இந்நூலிற்குச் சிலப்பதிகாரமென்று பெயரிட்டனர். ந. பலராமையர் அவர்கள் இயற்றியது. 1—0—0

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை

24 மணிநேரத்திர்குள் குணம்

உலக பிரசித்தி பெற்ற வி. ஜி. என். அவர்களின் ரிங்குவரம் லோஷன், உபயோகிப்பதினுல், எல்லாவித படை, எச்சுத்தளிம்பு, மேகபடை, இவைகள் 24 மணி நேரத்திற்குள் நீங்கும். நிகதற்ற நற்சாட்சி பத்திரங்கள் பெற்று இருக்கிறது. புட்டி-1க்கு 0—10—0

சிகப்பு வாசனை சாந்து புட்டி 1க்கு 0—4—0
கருப்பு வாசனை சாந்து ,, 0—4—0
சிகப்பு மார்கு.இங்கி துணிகளுக்கு குறிபோடுவது 0—4—0

விலாசம்.

மார்டன் அண்டு கம்பெனி,
13, கிருஷ்ணப்ப நாயகன் அகிரஹாரம்,
மிண்டு பில்டிங்குஸ் மதருஸ்.

உலக நடை

(உதவி பத்திராதிபர்)

மகா யுத்தத்தில் தோல்வியுற்ற ஜர்மானியில் நேசதேசத்தார் நஷ்டஈடுகளைக் கைப்பற்ற வருற்காகவும், சாமாதான நிபந்தனைகளை காப்பாற்று வதற்கெனவும் தங்களுடைய ஆதீனத்தை செலுத்தி வருகின்றனர். ஜர்மானியர்கள் தங்கள் சுதந்தரங்களை பெரிதாக மதித்து சிற்சில விடங்களில் நேசதேச அதிகாரிகளுக்கு தீங்கிழைத்தனர். இதற்காக நேசதேசத்தார் சில நகரங்களை தண்டனைக்குட்படுத்தி அபராதம் விதித்துள்ளார். இவ்வபராதங்களை இட்டதவணைப்படி அந்நகரங்கள் செலுத்தத் தவறினால், இராஜாங்க பொக்கிஷத்திலிருந்து கவர்ந்து கொள்ளப்போவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இராஜதந்திரிகள் இக்கடும் முறைகளை அநுஷ்டிப்பார்களாயின்,தாங்கள் பிறரிடம் பகைத்துக் கொள்வதல்லாது, தங்களுடைய எண்ணங்கள் பலிதமாகுமா?

ஆங்கிலேயர்களுடைய இராஜதந்திரம் இக்காலங்களில் கவலைக்கிடமான முறையில் நடத்தப்பட்டு வருகின்றது. கிரீஸில் பழைய மந்திரிகளை தங்கள் வசமாக்கி, அத்தேச ஜனங்களுடைய நோக்கங்களுக்கு விரோதமாய் அம்மந்திரிகளை தவறான முறையில் தூண்டியதாலேயே, அம்மந்திரிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் எனச் செய்தி எட்டியிருக்கிறது. பழைய சுல்தானை யனுகிச் சூழ்ந்து துருக்கியர்களுக்கு எதிரிடையாய் நடத்தியதால், சுல்தான் பதவியையும் கவுரவத்தையும் இழந்தாரென்பது நமக்கு நன்றாய்த் தெரியும். இவ்வாறாக தங்கள் எண்ணங்கள் நிறைவேறப் பெறாமலும், கவுரவக்குறைவு மட்டும் உண்டாகும் வழிகளை விட்டுவிட்டு, நியாயமான மார்க்கங்களில் ஒழுகினால் ஆங்கிலேயர்கள் தங்கள் உயர் நிலையைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடுமென்பது சொல்லாமலே விளங்கும்.

அரசாங்கச் செலவைக் குறைக்க வழிதேட வந்த லார்டு இன்ச் கேப் ஐரோப்பிய சங்கத்தாருக்கு விடையளிப்பதில், தான் புதிய வரி விதிக்க வழிதேட வரவில்லை யென்று கூறியது நமக்கு சந்தோஷத்தை விளைவித்த தாயினும், அவர் தொழிற் பாதுகாப்பு சுங்கத்தை இகழ்வது ஆங்கிலேயர்களுடைய நன்மையை மட்டும் நாடியதாகவே யாகும். கூடிய வரை இந்தியர்களுக்கு வேண்டிய பண்டங்களெல்லாம் இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய வேண்டுமென்பதே நமது நோக்கம். இந்நோக்கம் கை கூடுவதற்கே ஆரம்பத்தில் நமது கைத்தொழிலைப் பாதுகாக்க அந்நிய நாட்டுச் சரக்குகளை சுங்கவரி விதித்து பஹிஷ்கரிக்க கருதுகிறோம். சுங்கவரியால் ஏழைகள் வருந்துவாரென்பதை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. அப்படி வருந்தினும் ஆடம்பரச் சரக்குகள் தான் வெளி நாட்டிலிருந்து வருகின்றன. ஜீவனத்திற்கு வேண்டுவன வெல்லாம் இந்நாட்டிலேயே உண்டாகின்றன.

எல்லா தேசங்களிலும் மந்திரி சபை மாற்றப்பட்டு வருகின்றது. பழைய மந்திரிகளின் போக்கைக் கண்டிப்பதும் புதிதான போக்கை யனுஷ்டிப்பதும் தத்கால நடையாய் விளங்குகிறது. சைனாவிலும், ஈஜிப்டிலும் புது மந்திரி சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. எங்கும் ஜனங்களுடைய நோக்கங்களே கடைசியில் வெற்றி பெறுகின்றன. அதிகாரிகளுடைய சூழ்ச்சிகளெல்லாம் சிறிது காலத்திற்கே அமுல் நடக்கின்றன. அரசனும் தான் கொண்ட கொள்கையை மாற்ற வேண்டி யிருக்கிறது. பிடிவாதம் பிடித்தால் பதவிக்கும் உயிருக்குமே மோசம் உண்டாகிறது. அதிகாரிகள் தங்கள் பொறுப்பையும் ஜனங்களின் விருப்பதையும் உணர்ந்து வெகு கவலையுடன் நடந்து கொள்ள வேண்டிய காலமே இது. ஈஜிப்டில் ஸாக்லூல் கட்சி யினர் ஆட்சி முறையைக் கைப்பற்றி யிருக்கிறார்கள். ஈஜிப்டின் போக்கு எவ்விதமென யாவரும் எதிர் பார்க்கிறார்கள்.

லோஸானில் வல்லரசுகள் சமாதான விஷயங்களை ஆராய்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு கட்சியினரும் தங்கள் தங்கள் தன்னலத்தை காப்பதில் பிறரறியா வண்ணம் தந்திரமாக உதார வார்த்தைகளால் மறைத்து வாதாடுகிறார்கள். ருஷியர்கள் ஒருவாறு துருக்கியை ஆதரித்து வருகிறார்கள்; லார்ட் கர்ஸான் வெகு திறமையுடன் பிரிடிஷாருடைய நேக்கங்களைப்பாதுகாத்து வருகிறார், கிரீஸ் முதலிய சிறிய இராஜ்யங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கமே வெளிப்படையாகச் சொல்லப்படுகிறது. இதனிடையே துருக்கியில் செலுத்த வேண்டிய கடன்களைப் பற்றியும், துருக்கியில் அன்னியர்களுக்கு விசேஷ உரிமைகளைப் பற்றியும் வாதாடப்படுகிறது. கடன்கள் வியாபார உரிமைகள், இவைகள் விஷயமாய் வல்லரசுகளுடைய பொறுமையும் சச்சரவும் ஏற்படக் கூடுமாகையால் துருக்கியரின் கட்சிக்கு கொஞ்சம் பலம் உண்டு.

ருஷியர்களை இராணுவப் பழக்கம் செய்வித்து ஜர்மானியர்கள் மறுபடி தங்கள் செல்வாக்கை யடைய எத்தனிக்கிறார்கள் எனவும், வெடிகுண்டு முதலிய யுத்த தளவாட சாமான்கள் ருஷியாவில் ஜர்மானியர்களால் செய்யப்பட்டுவருகின்றனவென்றும்,துருக்கிக்கும் இவைகள் அனுப்பப்படுகின்றனவென்றும் ஆங்கிலப்பத்திரிகை நிருபர்எழுதியுள்ளார். பத்திரிகை நிருபர்கள் சிற்சில ஸமயங்களில் பொருத்தமான சில பொய்க்கதைகளை கட்டிவிட்டு உலகத்தார் கலங்க வேடிக்கை பார்த்தது உண்டு. அவ்விதமாகவே இச்செய்தியும் இருக்கக் கூடுமோ வென நாம் சொல்லக்கூடவில்லை. இச்செய்தி உண்மையாயின், மறுபடியும் யுத்தம் தொடங்க இடமுண்டு. ஜர்மானியர்களோ தங்கள் சுதந்திரத்தை திரும்பக் கைக்கொள்ள உபாயங்களை தேடக் கூடும். ருஷியா துணையா யேற்பட்டால், பெரும் யுத்தமாகவே முடியும்.

சாரதா ஸல்லாபம்.

[சாரதா]

வெள்ளம் வந்த பிறகு அணைபோட எண்ணுபவனுடைய எத்தனம் எவ்வாறு பயனில்லையோ அதுபோல தற்காலத்தில் உலகத்திலெங்கும் உண்டாயிருக்கும் சுவதந்திர உணர்ச்சியைத் தடுக்க எத்தனிப்பதாகும். இந்தியாவிலிருக்கும் ஒரு ஆங்கிலேய சீமான் டைம்ஸ் பத்திரிகையில் இத்தேசத்தில் கைத்தொழில் பலப்படுவதினால் சுகத்திற் காதாரமான ஜாதி முறைமையினாலும் மதக் கொள்கையினாலும் வரும் திருப்தி யழிந்து விடுமே யென்று கவலைப்படுகிறார். இவருக்கு இத்தேசத்தின் ஜாதி மதங்களிடத்தில் வந்திருக்கும் பிரியம் வெகு ஆச்சரியகரமாக இருக்கிறது. அவைகளுக்கு அழிவு வந்த காலத்தில் தான் அவைகளின் மகிமை யறிந்தார் போலும். அயலாருடைய நிலத்தை யழிக்க வெண்ணி ஏரிக்கரையை உடைத்தவன் தன் நிலமும் அழிவதைக் கண்டு வருந்துவது போலாயிற்று. உலகமெங்கும் செல்வத்தினாலும் குடிப் பிறப்பாலும் வரும் பெருமையெல்லாம் அழிந்து கொண்டிருக்க, இத்தேசத்தில் மாத்திரம் அது பலமாயிருப்பதைக் கண்டு மனம் பொறுது அதை யழிப்பதற்குத் தங்களால் இயன்றமட்டும் பிரயத்தினம் செய்த ஆங்கிலேயர்கள் இப்பொழுது முறைமை தப்புவதினால் தங்களுடைய லாபத்திற்கு இடைஞ்சலாயிருப்பதை நோக்கி அதை மறுபடியும் முன்போலாக்க எத்தனிப்பது பயன்படுமா? எவ்விதத்தினாலும் இத்தேசத்தில் கைத்தொழில் விருத்தியடையாமலிருக்க வேண்டுமென்பதே யிவர்களெண்ணம். அது இனி நிறைவேறுமா?

இங்கிலாந்தில் இராஜ்யச் சபையில் இந்தியா மந்திரியார் இத்தேசத்தில் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களின் நிலைமையைப் பற்றி விசாரிக்கும்படி சிலரை நியமிப்பது அவசியமா என்று ஆலோசித்துக் கொண்டிருப்பதை நோக்குங்கால், இத்தேசத்தை சுயராஜ்ய வழியில் நாட்டியிருந்தாலும் அவ்வழியில் விரைவாய்ச் செல்லாமல் தடுப்பதற்கு வேண்டிய எத்தனங்கள் செய்வது போலிருக்கிறது. பெரிய தேர் ஓடிவரும்போது அதற்கு முட்டுக்கட்டை கொடுத்து அதை நேர் வழியில் செலுத்துவது அவசியமானாலும் இம் முட்டுக்கட்டைகள் கொடுத்து ரதத்தை நடத்துவோர் கொஞ்சம் பிசகிவிட்டால் ரதவேகத்தால் தாங்கள் உயிரிழப்பர். அதுபோலவே பொதுஜனங்களின் சுவதந்திர உணர்ச்சியின் பலத்தை யறிந்து அதைத் தடுக்காமல் நல்வழியில் செலுத்த வேண்டி யுழைப்பதே அறிவுடையோர்க் கழகாகும். அதன்றி அதை முற்றிலும் மாற்ற எண்ணங் கொண்டால் பெருவெள்ளத்தை ஒருவன் தன் சிறிய கைகொண்டடைக்க நினைப்பது போலாகும்.

இந்தியா சட்ட நிர்மாண சபையாரால் தள்ளிவிடப்பட்டும் அது அவசியமென்று இராஜப் பிரதிநிதியால் தீர்மானிக்கப்பட்டதான பத்திரிகைகளைக் குறித்த சட்டம் இங்கிலாந்தில் இராஜாவினால் அங்கீகரிப்பதற்கு இடைஞ்சலுண்டாய் தாமதப்படுவது நலமே. இங்கிலாந்தில் சபையோர்களினபிப்பிராயத்திற் கிணங்கி மந்திரியார் இச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு முன் சபையோருடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்க அவகாசங் கொடுப்பதாய்ச் சொன்னது இத்தேசத்திலதைப் பற்றி யுண்டாயிருக்கும் மனக்கவலையை ஒருவாறு தணிக்கும். இதனாலேயே இத்தேசத்திலிருக்கும் ஆங்கிலேய உத்யோகஸ்தருடைய மனநிலை சரியான வழியிற் செல்வதில்லை என்பது வெளியாகின்றது. ஜனப் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களை அனுசரித்து நடப்பது இவ்வுத்தியோகஸ்தர்களுக்கு அகௌரவமாகத் தோன்றிய போதிலும் தற்காலத்தில் உலகமெங்கும் உண்டாயிருக்கிற பொது ஜனங்களின் சுவதந்திர உணர்ச்சியை மதித்து நடப்பது நலமாகும். அதல்லாது தாங்கள் இதுவரையிலும் நடத்திவந்த மாதிரியே நடத்த எத்தனிப்பது எல்லோருக்கும் கஷ்டத்தை விளைவிக்கும்.

சென்னை சட்ட சபையில் பொருளுதவியால் பட்டம் பெறுவதாக ஒரு கனவான் சொன்னவுடன் பட்டம் பெற்ற பலரும் தங்களை யிகழ்ந்து கூறியதாக எண்ணி கோபங்கொண்டது இளிச்சவாயனுக்குக் கும்பிடு போட்டேனென்ற கதை போலிருக்கிறது. பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை யென்ற நாயனார் வாக்கியத்தைக் கவனிக்கும் பொழுது இவ்வுலகத்தில் பொருளாலேயோ அதற்கு சமானமான செயல்களாலேயோ காரியங்களை சாதிக்க வேண்டுமல்லாது வேறுபாயமில்லை யென்பது நன்கு விளங்கும். அப்படிக்கிருக்க இப்பட்டங்கள் மாத்திரம் அப்படிப்பட்டவை யல்ல வென்று சொல்வது நியாய மாகுமா. அவைகளையடைய ஆவல் கொண்டவர்கள் பொருள் செலவிட்டால் யாருக்கு நஷ்டமுண்டாகும். பட்டங்களினால் வரும் பயன் அடைவோரது மனதில் இன்பம் விளைவிப்பதே யன்றோ? வேறு பயனுமுண்டோ? அதற்காக வேண்டி பணம் செலவிடுபவரது புத்திவிசேஷத்தைப் பார்த்து ஆநந்தமடைவதல்லாது வேறு செயலுமுண்டோ? இவ்வாறான பழக்கங்களைத் தடுக்கும் 'வகையுமுண்டோ? இதற்கெல்லாம் மூலகாரணமாகிய அஞ்ஞானமுள்ளவரையில் இவைகளும் கூடவே யிருக்கும். ஆனாலிவ் வறிவின்மையை தங்களுக்குபயோகப்படுத்திக் கொள்ளும் அரசாங்கத்தாருடைய புத்தி நுட்பம் விசேஷமே.

சமீபத்தில் இங்கிலாந்தில் பேசிய ஸ்ரீமான் வெல்ஸ் என்னும் ஞானவான் இப்பொழுது மேல் நாடுகளில் வழங்கிவரும் நாகரிகத்திற்கே நாசகாலம் வந்து விட்டதென்றும், அதற் கடையாளமாக அந்நாடுகளிலுள்ள பெரிய நகரங்களும் அங்குள்ள கைத்தொழில் சாலைகளும் பாழடைவதல்லாது இருப்புப்பாதை முதலியவைகளும் அழிந்துவிட்டன வென்றும் கூறுகிறார். இதன்றியும் அநேக ஆயிரம் வேலையாட்கள் வேலையிழந்து மறுபடியும் உழுது பயிரிட்டு ஜீவிக்க ஆரம்பிக்கிறார்களென்றும் அவ்வாறு செய்ய முடியாத அநேகர் உயிரிழந்து விட்டார்களென்றும் கூறுகிறார். இவ்வபாயங்கள் இங்கிலாந்திலும் கூடிய சீக்கிரத்தில் வந்து விடுமென்று பயப்படுகின்றார். இவைகளை கவனிக்கும் பொழுது நாகரிகம் என்னும்' கப்பல் பெரிய யுத்த மென்றும் காற்றா லலையுண்டு பொறுமை யென்னும் மலையில் தாக்கியுடைந்து விடுகிறது போலிருக்கிறது. அவ்வாறுடையும் பொழுது அக்கப்பலிலுள்ளவர்களை கடலி லாழ்த்துவதற்க

யமுண்டோ? அதில் தப்புவர்களெவரோ? இந்நாக்ரிகம் இந்தியாதேசத்திலும் வர ஆரம்பித்திருந்தாலும் இத்தேசத்திலுள்ளாரில் சிலரே யக்கப்பலிலேறி யிருக்கிறார்கள். இக்கப்பலுடைவதால் தற்காலத்தில் இத் தேசத்திற் கதிக அபாயம் ஏற்படாதென்றாலும், நாம் இப்பொழுதே தக்க உபாயம் செய்யாவிட்டால் நமக்கும் நாசமுண்டாகு மென்பதிலய்யமில்லை. இதை உத்தேசித்தே மகாத்மா காந்தி விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய உணவைப் பயிரிட்டு உடையை நெய்து கொள்ளும்படியான பழக்கத்தை உண்டு பண்ண எத்தனித்தார்.

திருநீலகண்டத்துக் குயவனார்

(துகளன் எழுதியது)

சொல்லச் சிவன்றிரு வாணைதன் றூமொழிதோன
    சையை
யெல்லைத் துறந்துரு மூத்ததற் பின்னுமை கோன
    ருளால்
வில்லைப் புரைநுத லாளொ டிளமைபெற்றின்பமிக்கான்
றில்லைத் திருநீல கண்டக் குயவனுஞ் செய்தவனே.

திருத் தொண்டர் திருவந்தாதி

சூற்றும் அமரர் சுரபதி முதலோர் நின் திருப்பாதமல்லால் பற்றொன்றிலோம் என்று இறைஞ்ச, வானத்தவர் அமுதுண்டு உய்யுமாறு வன்னஞ்சையுண்ட கண்டத்தில் இலங்கும் ஏனத்து எயிறு கண்டால் பின்னைக்கண்கொண்டு காண்பதென்னே என்று போற்றப் பெற்ற தில்லைத் திருநட்டமாடியின் கருநட்ட கண்டத்தையே கண்டு களித்து சதா திருநீலகண்டமென நீலஞ்சேர் கண்டனாரையே பேசுபவராய் தில்லை மூதூரில் ஒரு குயவனார் இருந்தார்.

யானைக்கும் அடி பிறழுமே!

அவர் தமது இளமைப் பருவத்தில், விதி வசத்தால், மனதுக் கிசைந்த மனையாள் அகத்திருந்தும் வேசி வீட்டிற்கு ஒரு நாட் சென்று பிறகு தம்மையே இகழ்ந்து மன நொந்து வீடு சேர்ந்த போது தன் கணவனார் காமத்தால் வழிவிட்டு விலகினதற்கு வருந்திய அவரது மனைவி அவர் எவ்வளவோ வேண்டிக் கொண்டும் இணங்காமல் வெறுப்பையே மேற்கொண்டு "எம்மைத் தீண்டன்மின்" என்று மறுதளிக்கவே, அன்று முதல் பெண்ணுருத் தீண்டாமை கடன் என விரதம் பூண்டு ஒழுகலாயினார்.

வேசி வீடு புகுந்த குற்றமொரு புறமிருக்க, மனைவியின் கோப மொழிகளை மேற்கொண்டு இவ்விதக் கொடிய விரதம் பூண்டது நன்றோ என்று சந்தேகம் கொள்ளலாம்; ஆனால், இந்நாயனாரின் பெருமை விரதத்தை மேற் கொண்டதால் அன்று; ஆகவே, மேற்கொள்வதற்குப் போதிய காரணங்கள் இருந்தனவா என்று விசாரிப்பது அனாவசியம்; விரதத்தை மேற்கொண்ட பின் அதைச் சீரிவர நடத்தியதே இவரது பெருமையை பெருக்குவது. குற்றங்கள் நாடுறின் மானிட வுருக் கொண்ட எவனுக்கும் தப்ப இடமில்லை; குயவனார் வேசி வீடு சென்றதையும், பிறகு மனையாளின் கடுமொழிகேட்டு விரதம் பூண்டதும் விதி வசமாக வந்ததெனவே கொள்ளல் வேண்டும். வித்தகனார் விளையாடல்களை யார் அறிவார்? நாம் பாராட்டுவதெல்லாம், விரதங் கொண்டபின் இல்லற வழியில் நின்று போற்றற் கரிய தம் பேராணையைப் போற்றி, யாண்டுகள் பலவும் சென்று "வளமலி இளமை நீங்கி, வடிவுறு மூப்பு வந்த" பின்னும் விரதவழியே இவர் கலங்காது நின்றது அதிசயமே.

குயவனார் சிறந்த சிவபக்தர்; தில்லையம்பத்தாடியின் பாதத்தைத் தன்னெஞ்சுள் இருத்தி, சிவபக்தர்கள் தம் வீடு வரப் பெற்றால் இன்புடன் வரவேற்று வேண்டிய மட்டும் உபசரித்து தாம் புனைந்த மட்கலங்களையும் இதர பொருட்களையும் அவர்களுக்கீந்து போற்றுவது இவரது வழக்கம். இங்ஙனம், இவர் அடியாருக்குத் தொண்டு புரிந்து வரும்போது, இவர் விரதம் பூண்டு ஒழுகுவதை உலகத்தவருக்கு விளக்குபவராய் நீலகண்டனார் ஒரு யோகியாகி இவரிடம் வந்து தாம் வேண்டும் போது உதவ வென்று ஒரு ஓட்டை அவர் வசம் கொடுத்துப் போய், சில நாட்சென்றதும் ஓட்டைத் தா வென்று கேட்டனர்; அப்போது குயவனார் அந்த ஓட்டை எங்கு தேடியும் காணாதவராய் ஓடு மறைந்ததைக் கண்டு வியப்புற்று என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து, நிற்க, சிவயோகியார், வேறு எது கொடுக்கினும் ஒவ்வாமல் "அந்த ஓட்டிற்குச் சமமுண்டோ? அதை வெளவ எண்ணினாய் போலும்" என்று பழி கூறி, தில்லை மூவாயிரவர் முன் குயவனாரை இழுத்துச் சென்று "உன் மனைவியைத் தொட்டுச் சபதம் செய்து கொடுத்தாலொழிய விடேன்" என்றார். சபதஞ் செய்வதற்குக் கூட மனைவியைத் தீண்டுதல் விரதபங்கமாகு மென்று கருதிய குயவனாரும் என்ன செய்வதென்று பலவாறு யோசித்து, இறுதியில் தம் கையிலிருந்த கோலை நீட்டி மனைவியையும் அதைப் பிடித்துக் கொள்ளச் சொன்ன போது, அது போதாதென்று ஆக்ஷேபித்த யோகியாருக்கு ஊரார் கேட்க, தாம் முறை பிறழ்ந்து நடந்ததையும் அப்போது தம் மனைவி கடுமொழிகள் கூறியதையும் அன்று முதல் விரதம் பூண்டு தாம் நடப்பதையும் விஸ்தரித்துச் சொல்லி அவர் ஆக்ஷேபத்தை நீக்கிய பின், சபதம் செய்வதற்காக மனைவியுடன் அருகிலிருந்த குளத்தில் இறங்கி, மூழ்கி எழும்போது யோகியார் மறைந்தனர். அவரருளால் தம்பதிகள் இருவரும் இளமையோடு அழகு வாய்ப்ப குளத்தின்றும் எழுந்தனர். அன்று முதல் அக்குளம் இளமை நாயனார் குளம் என்று வழங்கலாயிற்று என்பர். கடவுளரது கிருபையையுணர்ந்து அவரது ஆக்ஞையைக் கைப்பற்றி இல்லற வாழ்க்கையில் இனிதமர்ந்து நீடூழி வாழ்ந்தனர்; என்பது இந்த நாயனாரின் ஆரிய சரிதம்.

அகஸ்மாத்தாய் தமக்கு நேரிட்ட தோஷங்களைப் பல ரறிய பஹிரங்கமாய் ஒன்றையும் ஒளிக்காமல் உரைத்தது குயவனாரின் பெருமையை விளக்குகின்றது. தாமிழைத்த தீங்குகளை ஒளித்து மறைத்து சிறுகப் பேசுவதே மானிடரியல்பு "உற்றது உரைக்கின் அற்றது பற்றும்" என்பது பாரதத்தில் பழம் பொருந்து சருக்கத்தை யொட்டி வழங்கும் பழமொழி. ஊழ் வலியா லுற்றதையும் தாம் மனதாரச் செய்ததெனக் கருதி மன நொந்து, பொறுத்தருள வேண்டுமென்று கடவுளரை வேண்டி நின்று அந்த தோஷங்களை, எவ்லோரும் கேட்டிகழ, கூசாமற் கூறின் செய்வினையின் தோஷம் அகலும் என்பதும் விரதம் பூண்டக்கால் யாதுறினிம் அவ்விதத்தும் வழுவாது நிற்றல் கடமை என்பதும் இவரது வாழ்க்கையினின்றும் நாம் அறியும் உண்மைகள்.

நமது பண்டைப் பெருமையும், தற்கால வாழ்வும்

(B. ராமஸ்வாமி)

"மனித கோடிகளில் பிறந்த ஒவ்வொரு பகுதியினரும் நாகரிகத்திற் சிறந்து தங்கள் குணானுபவங்களுக்கேற்ப உயர்ந்த பதவியடையப் பாடுபடுவது அவர்கள் பிறப்புரிமையென்றும், இதுவே தெய்வ ஸம்மதமென்றும் ஒரு பெரியார் கூறியுள்ளார்.

இந்தியா தேசமோ இயற்கையமைப்பில் நிகரற்றது. அதில் வசிக்கும் மனிதர்களோவெனில், ஐரோப்பா முதலிய கண்டங்களில் ஜனங்கள் மிருகங்களின் தோலைப் போர்த்து, அனேக அநாகரிக முறைகளைக் கையாண்ட காலத்திற்கு வெகு நாட்களுக்கு முன்னமேயே, உலகத்தோர் வியக்கும்படியான அருட்செல்வம், பொருட்செல்வம் முதலியன குறைவறப் பெற்று விளங்கினார்களென சரித்திர வாயிலாக அறிகிறோம்.

இத்தகைய மேம்பாடடைந்த முன்னோர்களின் வமிசத்திலுதித்த நாமும் நம்மை ஆளுவோரும் நமது நாகரீகத்தின் போக்கையும், மனப்பான்மையையும் பரஸ்பரம் அறிந்துகொண்டு வேண்டுவனவற்றை தீர்மானிப்பதற்கு நமது சரித்திரமே உற்ற துணையாகும். நமக்குள் சாசுவத ஸமாதானம் நிலவுவதற்கும் இதுதான் வழி.

நமது தேசசரித்திரமோவெனில், அனேக காரணங்களால் ஒழுங்காயும் உண்மையாயும் காணக்கிடைக்கவில்லை. ஆயினும் நமக்குக் கிடைத்திருக்கும் உபநிடதம், புராணம், இதிகாசம் முதலியனவைகளும், கல்வெட்டுக்களும் (Inscriptions) சுரங்கச் சாதனங்களும் (Archaelogical finds) வெகுவாய் ஊகித்துணர்ந்துகொள்ள வழிகாட்டிகளாயிருக்கின்றன. இது நிற்க, மேனாட்டார் நடையுடைகளிலும், மாய வலைகளிலும் மயக்குண்டு மனவமைதி குன்றிவருந்தும் நாம் பண்டைச் சரிதங்களைப் பார்த்து கர்வங் கொள்வதில் மட்டும் பயனில்லை. ஏனெனில், நம்மிடம் சமய ஞானம், உண்மை எண்ணம், சாமானிய வாழ்க்கை, உண்மையான நம்பிக்கையெல்லாம் குறைந்துவிட்டது. நாம் மறுபடியும் முன்னேற்றமடைந்து உலகிற் கோரணியாய் விளங்க வேண்டுமானால் புராதன நூல்களின் சூக்ஷமங்களையும், நம் முன்னோர்களின் வாழ்க்கையி னியல்பையும் உள்ளபடி உணர்ந்து

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்ககொளல்"

என்றவாறு நமது வாழ்க்கையை தற்காலத்திற் கேற்ப, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும், ஒழுங்கு படுத்திக்கொள்ளுதல் நமது முதற்கடமையாகும்.

நம்முடைய முன்னோர்கள் எத்தகைய சிறப்பு வாய்ந்தவர்களாயிருந்தார்களென்று மேற்குறிப்பிட்ட ஸாதனங்களைக்கொண்டு ஆராயுமிடத்து அவர்களிடத்திருந்த தர்மசிந்தையும், ஸமத்வ புத்தியும், பசுவிருத்தியைத் தள்ளி பகுத்தறிவைக் கொண்டு ஞானமடைந்து, பிரஹ்மத்தின் ஸ்வரூபம், ஜீவப்ரஹ்மைக்கியம், அணிமாதி அஷ்டைசுவரியங்களையும் பகவானது ஏகதேசாம்சமான மாயையின் விலாசமெனத் தெளிந்து, மெய்ப்பொருளையே நாடி,

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றெல்லா
ரவஞ் செய்வ ராசையுட் பட்டு"

என தவத்தை மேற்கொண்டு நித்திய முக்தர்களானது இவைகளைக் காண்கிறோம்.

இத்தகைய ஞானமுண்டாகப் பெற்று, இராஜ்யத்தையும், பெண்டு பிள்ளைகளையும் பொருட்படுத்தாது கானகமேகி, தவக்கோலங்கொண்டு, உலகிற் கோரணியாயிருந்த மன்னாதிமன்னர்கள் வாழ்ந்ததாகவும் அறிகிறோம்.

உலகத்தில் தர்மமானது கெடுந்தோறும் பகவானே தன் யோக மாயையால் உலகத்தில் தோன்றி துஷ்ட நிக்கிரகத்வாரா சிஷ்டபரிபாலனம் செய்திருக்கிறதையும் காண்கிறோம்.

வயதிலும், ஞானத்திலும், சீலத்திலும் முதிர்ந்த பெரியோரை வழிபடல், அவர்கட்குப் பணி செய்தல், விநயத்தோடு அவர்கள் வாக்கிலிருந்து வரும் அமிருத தாரையைப் பானம் பண்ணுதல், இத்தகைய காலக்ஷேபத்தைவிட "இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்று திடபக்தியுடனிருந்து வந்த மகான்களிருந்ததையும் காண்கிறோம்.

இத்தகைய ஞானமும் கல்வியும் மலிந்த இந்நாட்டில் தேகத்தில் ஆத்மபுத்தி வந்துவிட்டது; நாஸ்திகம் தலைவிரித்தாடுகிறது; அஹம்பாவம் முதிர்ந்துவிட்டது; சமயச்சண்டையும் வலுத்துவிட்டது.

முற்காலத்தில் க்ஷத்திரிய குலத்துதித்து, அசுரர்களையும் இராக்ஷஸர்களையும் சின்னாபின்னப்படுத்தி இந்நாட்டை அலங்கரித்த சூரர்களையும், தங்களுக்குரித்தான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு வாய்ந்த ஸதிரீரத்னங்கள், "பாழே மடக்கொடியில்லா மனை" யெனக் கொண்டாடும்படி இல்லறம் நடத்தியதையும் ஞானமடைந்து மோக்ஷம் (விடுதலை) அடைவதில் கொஞ்சமும் பின்தாங்கியவர்களில்லை யென்பதையும், தங் கணவனுக்கும் தனக்கும் நல்வழியைத்தேடி "ஸகதர்ம சரி" யென விளங்கியதையும், இயற்கையில் அன்புக்கும், ஆதரவுக்கும் பாத்தியப்பட்டவர்களாய் 'மெல்லியல்' எனப்பெயர் வாய்ந்த நாரீமணிகள் தங்கள் குலத்திற்கும் மானத்திற்கும் கேடுநேர்ந்த காலத்து மானமழிந் துயிர் வாழ்தலினும் உயிர் நீத்தலே தகுதியெனத் தேர்ந்து தன்னலங் கருதாது புன்முறுவலுடன் எரிமூட்டி

"உறங்குவது போலுஞ் சாக்கா
டுறங்கிவிழிப்பது போலும் பிறப்பு"

என்று யாக்கை நிலைமையை முன்னிட்டு உயிரை த்யாகம் செய்ததையும் காண்கிறோம்.

இக்காலத்திலோ வலிகுன்றி, நலங்குலைந்து, ஊழியஞ் செய்வதிலேயே கூனாய், குருடாய், செவிடாய் உற்சாகங்குன்றி நடைப்பிணமாய், குண்டுவெடியின் சப்தத்தைக் கேட்ட மாத்திரத்தில் ஒரு காதவழி ஓடத் தலைப்பட்டு விட்டோம்.

இக்காலத்துப் பெண்களோ ஆசாரச் சீர்திருத்தமெனப் பெயர் வைத்துக்கொண்டு, யாதொரு வரம்புக்கும் உட்படாமல், போலி நியாயங்களை எடுத்துரைத்துக்கொண்டு, இயற்கையமைப்பில் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் இன்றியமையாதவர்களென்பதை மதியாது மேனாட்டு நாகரிக முறைகளைக் கையாண்டு, தங்களெண்ணங்கள் நிறைவேறாது வருந்துவதையும் பார்க்கிறோம்.

முற்காலத்தில் ஆங்காங்கு கிராமப்பொதுச் சபைகள் (Panchayat) ஜனஸமூக விஷயங்களில் முடிவான ஆலோசனை செய்தல், குற்றவாளிகளை தண்டித்தல், அபராதம் விதித்தல், ஸமுதாய வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி முறைகளை ஆடம்பரமில்லாமல் சீலத்தையே விரதமாகக்கொண்ட பெரியோர்கள் மூலமாய் ஓதுவித்தல், அங்கங்கே அரண்களும், தெய்வ வழிபாட்டிற்கு கோவில்களும், வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களும் நிறைந்திருந்ததை கண்கூடாகக் காண்கிறோம். மேலும் ஒவ்வொரு ஜன ஸமுதாயத்திலும் ஸுக வாழ்வைக் கோருவோமாயின், தொழில்முறை பற்றியாதாயினும் ஒரு பாகுபாடு ஏற்படுத்தி, மனிதனுடைய தேக தாரணைக்கு ஒவ்வொரு தொழிலை நடத்த உறுப்புகள் எத்துணை அவசியமோ, அது போல ஒவ்வொரு பிரிவினரும் இன்றியமையாத உறுப்புக்களெனவும், தத்தம் வேலையை ஒழுங்குபடச் செய்தால ஸமுதாயவாழ்வுக்கு உற்ற வழியென மனுமுறை தாங்கிநிற்க, இப் பாகுபாடுகளை அறவே ஒழித்துவிட்டால் நம்மைச்சூழ்ந்திருக்கும் கஷ்டங்களெல்லாம் நீங்கிவிடுமென்றுன்னி, வீண் பாடு படும் மாந்தர்களைப் பார்த்து நகையாடாது என் செய்வது! மனுவின் உயர்தர நோக்கத்தை இவர்கள் கவனித்தார்களில்லை. ஜாதி வித்தியாசமே இல்லையென்று கொண்ட மேனாட்டார் ஒருவருக்கொருவர் த்வேஷங்கொண்டு, தெய்வத்தை மறந்து ஆலயங்களை யுத்த தளவாடங்களினாலும் பீரங்கிக் குண்டுகளினாலும் அலங்கரித்து, போர் புரிந்து, அடியோடு சமாதானத்தைக் குலைத்துக் கொண்டு, ஏக்கமுற்றிருத்தலை கவனித்தார்களில்லை போலும்.

நம்மனோர்கள் வெகு காலத்திற்கு முன்னாலேயே கப்பல்கள் மூலமாய் கடல்தாண்டி வியாபாரத்தைப் பெருக்கி யிருக்கிறார்களென்பதற்குப் போதுமான சாக்ஷியங்களிருக்கின்றன. மேலும் பொன் வெள்ளி முதலான உலோகங்களிலும், மரம், தந்தம் இவைகளின் வேலைதிறமையும் கல்லினாலும், பளிங்கினாலும், சுண்ணச்சாந்தினாலும் செய்த அருமையான கட்டிடங்களும், கிருகங்களையும், புரங்களையும், பட்டணங்களையும் கட்டுவதில் அவர்கள் காட்டியுள்ள நுண்ணறிவானது இக்காலத்திலும் கண்டோர், கேட்டோரெல்லாம் வியக்கும்படியா யிருக்கின்றன.

பஞ்சினால ஒரு காலத்தில் நெய்யப்பட்ட ஆடையானது 'அந்தியின் பனி' (Evening Dew)—(நனைத்துப் புற்றரையின்மேல் விரிக்கக் கண்ணுக்குத் தோன்றாது)—"ஓடுநீர்" (Running water) "காற்றில் நெசவு" (Woven Air) என்று அதி நுட்பமாயிருந்து விளங்கியதாகவும் தெரிகிறது.

சித்திரங்களிலும், பதுமைகளிலும், விக்கிரகங்களிலும், பிரபஞ்சமெல்லாம் ஒரே வஸ்துவின் விகார மெனத்தேர்ந்து, எல்லா வஸ்துக்களிலும் ஊடுருவிப்பாயும் சைதந்ய வஸ்துவை விளங்கவைப்பதே கலையின் நோக்கமெனக் கொண்டிருந்ததையும் பார்க்கிறோம். முன்னோர்கள் நமது தேச பாஷைகளை பொன்னேபோல் போற்றியிருப்பதை உற்று நோக்கின், ஒலியின் பொலிவும், எழுத்துக்களின் ஸ்வரூபமும், வார்த்தைகளின் அர்த்த புஷ்டியும் வெளியாகிறது. விவசாயத்தில் நமக்கு கண்ணியமான புத்தியும், குடித்தனப்பாங்கும் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்—மற்றெல்லாந் தொழுதுண்டு பின் செல்பவர்' என்ற இடப்பிரக்ஞை நம்முன்னோர்களிட மிருந்தது வியக்கத்தக்கதே.

யுஞானி, ஆயுர்வேத முறைகளில் விசேஷபாண்டித்தியம் அவர்கள் அடைந்திருந்ததையும் காண்கிறோம். இத்துடன்,

> "குடிதழீஇக் கோலோச்சு மாநிலமன்ன
> னடிதழீஇ நிற்கு முலகு"

என்று தெய்வமே மானிட வடிவந்தாங்கி நமக்கு ஹிதஞ் செய்யவந்த மூர்த்தியென நம்மிடமுள்ள ராஜவிசுவாசமோ வேறெந்த ஜாதியாரிடமும் இல்லையென்று உறுதி கூறலாம்.

இப்படியிருக்க, நம்முடைய முன்னோர்களின் கல்வித்திறத்தையும், வேலைப்பாடுகளையும் கண்டு வியந்து அஹம்பாவத்துடன் நின்றுவிடாமல் நம்மிடம் தற்போதுள்ள குற்றங்களைக் களைய வழி தேடுவதவசியமாகிறது. சாமானிய வாழ்க்கை, ஆடம்பரமின்மை, கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைதல், குற்றங்கண்ட விடத்து தைரியமாய் உண்மையைக் கடைப்பிடித்தொழுகுதல், ஜீவர்களிடத்தன்பு, உத்தம த்யாகம் இவைகளில் ஒவ்வொருவரும் தம்மாலியன்றவளவு நம்முடைய வாழநாட்களில் பாடுபடவேண்டும். நம்மிடத்திலோ ஏராளமான சமய நூல்கள் கிடக்கின்றன. அவைகளின் சாரத்தை அறிந்துகொள்ள வேண்டும்.

நம்முடைய கைத்தொழிலும், வியாபாரப் பெருக்கும் க்ஷீணமடைந்து விட்டன. தற்காலத்தில் நாமடைந்த கல்வியானது நம்மை பரம்பரை ஊழியர்களாகச் செய்தது மல்லாமல் நம்மிடத்தில் சுய நிர்ணயத்தையும், சுயமதிப்பையும் குறைத்து விட்டது. நமது தேசத்தில் விளைபொருள்களுக்குக் குறைச்சலில்லை. நாமிவ்வளவு தாழ்ந்த நிலையடைந்தும், முதலாளிகளுக்குக் குறைவில்லை. ஆனால் ஒவ்வொரு துறையிலும், முக்கியமாக வியாபாரப் பெருக்கிற்கு வேண்டிய நூல்களிலிருந்து மேனாட்டாராயினுஞ் சரியே, மற்றென்னாட்டாராயினுஞ் சரியே, அவர்களிடமிருந்து குணபாகங்களை கிரகித்து, பரஸ்பர நம்பிக்கையுடன் முதலாளிகள் ஒன்று சேர்ந்து சாஸ்திராராய்ச்சியில் தேர்ந்த நிபுணர்களைக்கொண்டு பண்டகசாலைகளேற்படுத்தி, ஏழைகளுக்கு உணவும், தொழிலுக்கும் தொழிலாளருக்கும் முன்னேற்றம், தேசத்தில் பணப்பெருக்கு உண்டாகவேண்டி சரசமான விலைக்கு அருமையான தினுசுகளைத் த்யாரிக்க வேண்டும்; கூட்டுறவு வேண்டும்; நம்முடைய வாழ்விற்கு ஒரு வேகமும், ஜ்வாலையும் கொடுத்து விடாமுயற்சியுடன் பாடுபடுவோமானால் "சிற்றுளியால் கல்லுந் தகரும்" என்றாற்போல் நமக்கும் நமது சந்ததியினருக்கும் விமோசனம் காலக்கிரமத்தில் ஏற்படுமென்பது திண்ணம்.

சோதிடப்புலி சோணாசலம்.

[ராம சந்திரர்.]

நேற்று கிருத்திகா தீபத்தன்று கோவிலில் வெளி மண்டபத்தில் சோணாசலம் நாடிக்கிரந்தங்களைப் பற்றி உபந்நியாஸம் செய்வதாய் கேள்விப் பட்டு அங்கு சென்றேன். மண்டபத்தில் பெருங் கூட்டமாயிருந்தது. அங்கு உடலிற் சாற்றிய பன்னிரு நாமங்களோடும், அரையில் கட்டிய பஞ்ச கச்சமும் மேலே போர்த்த சால்வையும் விளங்க, ஒருவர் அக்கிராசனத்தி லிருந்தார். பக்கத்தில் சோணாசலமும் உட்கார்ந்திருந்தான். நானும் கூட்டத்தின் மறைவில் ஒரு புறத்தில் உட்கார்ந் தேன். உடனே அக்கிராஸனத்திலிருந்த ஆசாரி யர் எழுந்து பேசத்தொடங்கினார்.

ஆசாரியார் : அன்பர்களே, ஆவதுங் காலத்தாலே அழிவதுங் காலத்தாலே யென் றறிந்த நம் முன் னோர்கள் கால வேறுபாடுகளை யெடுத்து விவரிக் கும் வேதாங்க சாஸ்திரமாகிய ஜோதிஷத்தை நன்காராய்ந்து அதில் பூரண நம்பிக்கையோடிருந் து மேன்மை யடைந்தார்க ளென்பது சொல்ல வேண்டுவதில்லை. தற்காலத்திலோ அந் நம்பிக்கை முற்றிலுமழிந்து மனம் வேறுபட்டு நூதன கல்வி யென்னும் காற்றா லலைப்புண்டு ஆராய்ச்சியென் னும் அனலால் காய்ந்து வாடியிருக்கும் நமது மன மென்னும் பயிர் முன்போல் தழைத்தோங்கும் வண்ணம் நீருண்ட மேகம்போல் நமது ஊரில் வந்து தனது சொல் மாரியால் களிப்பை யுண் டாக்கிய சோணாசலத்திற்கு நாமியற்றும் கைம் மாறுண்டோ? அவர் இவ்வூருக்கு வந்தது நாம் செய்த புண்ணியமன்று; நம் முன்னோர் செய்த புண்ணியமென்றே நினைக்கிறேன். இது நிற்க, அவர் இன்றையதினம் நாடிகிரந்தங்களைப் பற்றி உபந்நியசிக்க ஒப்புக்கொண்டது நமது பெரும் பாக்கியமாகும். அவரது உபந்நியாஸத்தைக் கேட்க ஆவல்கொண்ட உங்களுக்கு தடையாக நான் அதிகமாய் பேசுவது தகாது. ஆனாலும் நான் அவரை வேண்டிக்கொள்வது ஒன்று. அதாவது இப்பொழுது கண்டெடுக்கப்பட்ட துருவநாடி சாஸ்திரத்தின் பலாபலத்தைப் பற்றி விவரமாய் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்; என்று சொல்லி யவர் உட்கார்ந்த உடன், சோணாசலம் எழுந்து நானிருந்த பக்கத்தைப் பார்த்த வுடன் நான் தலையைக் குனிந்து வந்த சிரிப்பை யடக்கி தூணின் மறைவிலொதுங்கினேன். அவனு மற்றை யவர்களைப் பார்த்து பின்வருமாறு பேசத்தொடங் கினான்.

சோணாசலம் : நண்பர்களே, இப்பொழுது சோ திட ரத்னாகரமென விளங்கும் இரகுநாதாசாரியா ரவர்கள் என்னைப்பற்றிச் சொல்லியவைகளெல் லாம் அவருக்கு என்னிடமுள்ள அன்பின் மிகுதி யைக் காட்டியதல்லாது நான் அவைகளுக்குரித் தானவன் என்று எண்ணவேண்டாம். ஆசாரியா ரவர்கள் என்னிடத்தி லதிக கிருபையோடு இன்ன விஷயத்தைப்பற்றி பேசவேண்டு மென்பதையும் குறிப்பித்தார். இக்காலத்தில் நாடிகிரந்தங்களின் உண்மையான லக்ஷணம் அறியாதார் அவைகள் குரு, சுக்கிரன், சனி, துருவன் முதலியவர்களால் இயற்றப்பட்டதாக எண்ணியிருக்கிறார்கள். இது வே பிசகான அபிப்பிராயம். இக்கிரந்தங்கள் வே தம்போல் ஆதியங் கடவுள் வாக்கினின்றும் வெ ளிப்பட்டனவாம். எந்த கிரக நிலையை நாடி பலன் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த கிரகத்தின் பெய ரா லந்த நாடி விளங்கா நிற்கும். இதை யறியாதார் இந் நாடிக் கிரந்தங்கள் ஒன்றிற்கொன்று பொருத்த மில்லாதிருக்கின்றன வென்று மயங்கித் திரிவர். இன்னமொரு இரகசியம் சொல்லுகிறேன் கேளுங் கள். இந் நாடிகள் காலத்திற்கும் தேசத்திற்கும் தக்கபடி வேறு பட்டுள்ளன. இதையறியாது சோதிடரெனப் பெயர் கொண்டவர்க ளெல்லாம் தங்களிடத்திலிருக்கும் நாடியே யெல்லாக் காலங் களிலும் தேசங்களிலும் பலிதமாகுமென நினைப் பதால்தான் சாஸ்திரங்களுக்கிக கவுரவக் குறை வேற்படுகின்றது. இவ்விஷயங்கள் அண்ட புரா ணத்தில் அகத்திய முனிவர் அய்யந் தீர்ந்த படலத் தில் விரிவாயெடுத்துரைக்கப் பட்டிருக்கின்றன. அவைகளை கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுகி றேன். கதிரவன் செல்வதைத் தடுத்த விந்தியத் தை யடக்கி அமரர்கள் அல்லல் தீரக் கடலை யுண்டு களிப்பெய்திய குரு முனியும் தனக்குள்ள சந்தே கங்களைத் தீர்க்க வெண்ணி காலாதீதனாகிய கபாலி யை யடைந்து இப்பூவுலகில் பலன் படும் சோதி டக் கிரந்தம் எதுவென வினவ, சிவபெருமானும் கொஞ்சகாலம் தியானத்திலிருந்து பிறகு புன் னகையோடு கூறுகிறார். மைந்தா, கேள், ஒவ் வொரு லோகத்தில் ஒவ்வொரு நாடி பலிதமாகும். அது எவ்வாறென்றால் சொல்லுகிறேன் கேள்—

> "சத்திய லோகத்திற் சார்ந்திடும் துருவ நாடி
> நத்திய நாகத்தில் நவில்வது குரு நாடி
> அத்திர புவியிற்றான் அமைவது சனி நாடி
> பொத்திய பாதாளம் பொலிவது பிருகு நாடி".

ஆகவே, சத்திய லோகத்திற் குரித்தான சாஸ் திரமாகிய துருவ நாடியை இப்பூவுலகில் சொல்லு வதினால் பயன்படாது. அதன்றியும் துருவம் அசலமாயிருப்பதென்பது கணித நூலுணர்ந்த உங்களுக்கு நான் எடுத்துக் காட்டவேண்டுவ தில்லை. அப்படிக்கிருக்க, அதன் நிலையை நாடிச் சொல்லும் சாஸ்திரம் அஸ்திரமாயும் எப்பொழு தும் மாறுத லடைந்து கொண்டே யிருக்கும் புவி யில் பலன் கொடுக்குமா, கவனியுங்கள். இது நோக்கியே சிவபெருமான் "அத்திர புவியிற்றான் அமைவது சனி நாடி" யென்றருளிச்செய்தார். இதனாலேயே இவ்வுலகத்திற் கேற்ற சாஸ்திரம் சனி நாடியென விளங்கும். அதன்றியும் கால வரையறை செய்யுங்கால் எம்பெருமான் உமை யவளை நோக்கி "கன்னியே கலியதனிற் சனி நாடி" என்று சொல்லியிருப்பதாலும் இக்காலத் திற் கேற்றதும் அச்சனி நாடியே யாகும். துருவ நாடி யாகப்பட்டது சலனமற்று சுயம் பிரகாச மாயும் சத்தியமாயும் நித்தியமாயும் விளங்கும் பிரம்ம லோகத்திலன்றி இவ்வுலகிற் செல்லாது. அதுபற்றியே, அரனும் "சத்திய லோகத்திற் சார்ந்தது துருவ நாடி" யெனக் கூறினார். இவ் விரகசிய முணராது சோதிடர்கள் துருவ நாடி யைத் துணையாகக் கொண்டு இவ்வுலகியலைத் தெரிவிக்க நினைத்தா லவ்வெண்ணம் நிறைவேறு மா? இதைப்பற்றியே எம்பெருமான் குருமுனிக் குரைப்பார்.

> "ஒரு நிலையிற் றங்காத உலகியலை யறியும் வண்ணம்
> துருவமெனும் நாடி தன்னைத் துணையாகக் கொள் (ளுமது
> கருநிறத்த கடல் கடக்கக் கருது மவன் தானே
> பெருமலையைப் பரிசலெனக் கொண்ட வகை (போலாம்."

நித்தியமான துருவநாடியால் அநித்யமான உல கியலை யறிய எண்ணுவது கற்றோணியில் கடல் கடக்க எண்ணுவது போலாகு மென்றருளியதால்

அதன் பயனின்மையை விளக்கினார். இதுகளையெல்லாம் அறியாதார் சோதிடம் சொல்லப் புகுந்ததினாலேயே சாஸ்திரத்திற்கே மதிப்பு குறைந்துவிட்டது. இவ்வுலகிற்கும் கலிகாலத்திற்கும் ஏற்றதாயும் உலகிலுள்ள கலிக்குக் காரணமாகிய சனீச்வரனது நிலையை நாடிச் சொல்வதாயும் உள்ள சனி நாடி யொன்றிருப்பதாகக் கூட சோதிளர்களறியார். ஏதோ நான் சொல்லுவதினால் அச்சாஸ்திரத்தை ஏற்படுத்திக் கூறுவதாக எண்ணவேண்டாம். சுருதி, யுக்தி, யனுபவம் இம் மூன்றிற்கும் சம்மதமாயிருந்தால் ஒப்புக்கொள்ளுங்கள். ஆனால் இச் சனி நாடி ஏட்டுப் புஸ்தகங்களிலாவது அச்சிலாவது கிடைக்க மாட்டாது. புலியால் எனக்கு அருளப்பட்ட இதை யானும் தக்க சிடனைப்பார்த்து உபதேசித்து கர்ண பரம்பரையாக வரவேண்டுமே யன்றி வேறு விதமாக வெளிப்படுத்தும்படி என் குரு உத்திரவு கொடுக்கவில்லை. இதர சோதிடர்களைப் போல் இறந்த காலத்தைப் பற்றி நான் கூறுவதில்லை. மற்றைய விரண்டு காலங்களையும் பற்றியே விரிவாய்க் கூறி அவை பலிதமாகக்கண்ட பிறகே என் சனி நாடியின் மகிமையை ஒப்புக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். நான் அதிக நாழிகை உங்களை தாமதிக்கச் செய்ததை மன்னிக்கவேண்டுமெனச் சொல்லி உட்கார்ந்தான்.

உடனே அக்கிராசனாதிபதியாகிய ஆசாரியார் எழுந்து சொன்னதாவது.

ஆசாரியார்: பிரிய சகோதரர்களே, இப்பொழுது ஸ்ரீமான் சோணாசலம் என்னை சோதிட ரத்நாகரம் என ஸ்துதியாகச் சொன்னது என் கல்வி கடல் நீரைப் போலே பிறருக்கு பருக யோக்கியமற்றது என்பதாக அவர் பின்னர் கூறிய விஷயங்களால் ஏற்படுகின்றது. அவரால் வெளியிடப்பட்ட இரகஸியங்களைக் கேட்ட நானும் அது சரியென்றே நினைக்கிறேன். அவரது சனிநாடி அரனருளால் வந்ததாகையாலும் இவ்வுலகிற்கும் கலிகாலத்திற்கும் பொருந்த முடைத்தாதலாலும் அதை யொழிந்த மற்ற சாஸ்திரங்கள் பயன்படாதென்பது என்னுடைய தீர்மானம். இதர நாடிகளெல்லாம் இவ்வுலகத்திற்கும் காலத்திற்கும் ஏற்றவையல்ல. அவைகளை யொழித்து சனி நாடியையே நாம் நாடவேண்டும். அதின் பெருமையை நமக்கு வெளிப்படுத்திய இம் மகானுக்கு நாம் செய்யும் கைம்மாறுளதோ? அவர் நீடூழி காலம் வாழ்ந்து நம் மனத்தையும் புத்தியையும் மகிழச் செய்யும்படி இறைவனனுக்கிரகிப்பாரென நம்புகிறேன்; என்று சொல்லி உட்கார்ந்த உடன் எல்லாரும் சந்தோஷத்தால் கை கொட்டினார்கள். கூட்டம் கலைந்த உடன் சோணாசலம் நானிருந்த இடத்திற்கு வந்து என்னைத் தனியே யழைத்து 'நீ நான் சொல்வதெல்லாம் பொய் யென்கிறாயே; இப்பொழுது பார்த்தாயா, இவர்கள் தன்மையை' யென்றான்; அப்பா ஒருவேளை மெய்ப்பொருளாம் பரமனே நின்னெதிரில் வந்தால் உன் பொய்யில் மயங்கி விடுவாரென்பதற் கய்யமில்லை. உன்னை யதிக நாளா யறிந்த நான் மாத்திரம் உன் திறமறிவேன் என்று சொல்லித் திரும்பினேன். அவனும் நகைத்துத் திரும்பிச்சென்றான்.

புயற் காற்று

[V. நாராயணையர் M. A., M. L.]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நதபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாணகாலத்தில் தன்புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறுஒருவர் மனைவி என்றும் அறிய, அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும் வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும்; கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டு, உறவினர்களுக்கு அழைப்பு கடிதங்கள் அனுப்பிய பின்னர், கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய, கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்றாது கலங்கி, பிறகு கல்யாணதினத்தை ஒதுக்கிவைக்க அந்நதபாபுவை வேண்டியதும், அவர் அதற்கு கடைசியாக உடன்பட்டுவிட்டதும்; பிறகு வெளியூருக்குச் சென்றிருந்த யோகேந்திரன் வந்து கல்லியாண காரியங்கள் நடைபெறாததைக் கேட்டு, கவலையுற்று, அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று, அங்கு பள்ளிக்கூடமிருந்து வந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து, இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடியதும்; பிறகு அக்ஷயனுடன் தன் வீட்டிற்கு வந்து சமதேகங்களை வெளியிட்டு, அந்நத பாபுவையும் ஹேமநளினியையும் வருந்தச் செய்ததும், பிறகு இராமேசன் கமலாவுடன் தன்னூர் செல்லப்புறப்பட்டு அக்ஷயன் பின்தொடர்ந்ததையும், அவனை ஏமாற்றி கப்பல் மார்க்கமாய் வேறு இடம் சென்றதும், சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை.)

அன்று மத்தியான வேளையில் மணற்பாங்காய் ஆழமில்லாத இடத்தில் கப்பல் சிக்கிக் கொண்டது; அதை மறுபடி மிதக்கச் செய்வதற்காக பட்ட சிரமம் எல்லாம் வீணாயின; சாயங்கால மாகியும் அது மிதந்த பாடில்லை, கரை மேட்டினின்று கப்பல் மணலிற் சிக்கி யிருந்த கரை யோரம் வரையிலும் ஒரே மணற் பரப்பாயிருந்தது. அங்கே அஸ்தமிக்கு முன் கடைசித்தரம் நீர் மொண்டு போவதற்காக வநத பக்கத்தூர்ச் சிறுமிகள் கப்பல் சிக்கி நிற்பதைக் கண்டுவேடிக்கை பார்த்து நின்றார்கள். அவர்களில் சிலர் வெட்கி, முகத்தை மூடியிருநத தலைப்பினிடையே மறைந்து பார்த்தார்கள்; மற்றவர் தைரியமாய் உற்று நோக்கி நின்றனர். கரை மேட்டிலே சிறுபையன்கள் கும்பல் கும்பலாய்க் கூடி, வழக்கமாய் தங்களைக் கடந்து செல்லும் கப்பல் இன்று சிக்கிக் கொண்டு திண்டாடுவதைக் கண்டு கை கொட்டிக் களித்தார்கள்.

சூரியன் அஸ்தமனமாயினான்; அவனது அந்திய கிரணங்களால் மேல் வானம் சிவந்திருப்பதைக் கண்டு நின்றான் இராமேசன்; அப்போது மறைவு கட்டியிருந்த சமைய லிடத்திலிருந்து கமலா அங்கு வந்து இராமேசனை அழைக்க மெதுவாய் சற்று செருமினாள்; அவன் திரும்பிப் பாராததால், தன் னிடையில் தரித்திருந்த திறவு கோல் கொத்தைக் குலுக்கிச் சத்தப்படுத்தினாள்; இராமேசனைத்

திரும்பிப் பார்க்கச் செய்ய அதிகச் சத்தம் செய்ய வேண்டி யிருந்தது. அவன் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்து கமலாவைக் கண்டு அவளருகில் வந்து "நன்றாயிருக்கிறது நீ என்னை அழைக்கும் வழி" என்று பரிகசித்தான்.

"வேறு எப்படி அழைப்பது என்று தெரியவில்லையே" என்றாள் கமலா.

"ஏன், என்னுடைய அம்மா அப்பா எனக்கு எதற்காக எனக்குப் பெயர் வைத்தார்கள், கூப்பிடுவதற்காக இல்லாவிட்டால்; என்னைக் கூப்பிட வேண்டுமானால் இராமேச பாபு என்று கூப்பிடுவதுதானே."

மறுபடியும் இதென்ன அசட்டுப் பரிகாஸம்; ஹிந்து மனைவி தன் கணவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவாளோ! கமலாவின் கபோலங்கள் சூரியாஸ்தமன வானம் போற் சிவந்தன; "என்ன பேச்சு பேசுகிறீர்கள்!" என்றாள் தலை குனிந்து; "சாப்பாடு தயாராக விருக்கிறது, காலையிற் கூட நீங்கள் நன்றாய் சாப்பிடவில்லை; இப்பொழுதே சாப்பிட வாருங்கள்" என்று அழைத்தாள் கமலா.

ஆற்றங்கரைக் காற்று இராமேசனுக்குள்ள பசியைக் கிளப்பிற்று; ஆனால் இதைக் கமலாவிடம் சொன்னால் அவள் இவ்வளவு அசெளகரியங்களுக்கிடையே சிரமப்படுவாள் என்று தனக்குப் பசிக்கிறது என்று அவளிடம் சொல்லாதிருந்தான், இராமேசன்; இப்படி யிருந்தும், தான் ஒருவார்த்தையும் பேசாதிருந்தபோதும், அவள் ஊகித்தறிந்து சாப்பாடு தயாராயிற்று என்றறிவித்தது இராமேசனுக்கு பல விதமான சந்தோஷத்தைக் கொடுத்தது; முதலாவது, சீக்கிரமாக சாப்பிட்டு பசியைத் தணிக்கப் போகிறோம் என்பது; அதோடு, தனக்காக ஒருத்தி கவலைப்பட்டு சிரமப்பட்டு வேண்டிய வற்றைச் செய்கிறாள் என்ற ஆனந்தம் ஒரு புறம்; இப்படி ஒருவர் தனக்கு உபசரிப்பதை மறுக்கக்கூடுமோ? ஆயினும் இவ்வளவு உபசாரமும் தனக்கு உரியதல்ல என்ற எண்ணமும் அந்த உபசாரம் இன்பம் பயத்த போதிலும் அது தப்பான நினைப்பால் உண்டானது என்ற எண்ணமும் அவனை ஒரு புறம் வருத்தின. பெருமூச் செறிந்து சற்று மனவருத்தங் கொண்டு அறையுட் புகுந்தான்.

அவன் முகம் சற்று வாடியதை கமலா கவனியாதிருக்கவில்லை; "என்ன, இப்பொழுது சாப்பிட இஷ்ட மில்லைபோல் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்; உங்களுக்குப் பசியாக இருக்கும் என்றல்லவோ நினைத்துக் கூப்பிட்டேன்; உங்களை இஷ்டமில்லாதபோது அழைத்தேனே என்று வருத்தமாயிருக்கிறது எனக்கு" என்று சொன்னாள் கமலா.

உடனே இராமேசன் புன்னகையை மேற்கொண்டு "நீயா என்னை சாப்பிட அழைத்ததாக நினைக்கிறாய்; எனக்கு அதிகப் பசியாக விருந்தது, வந்தேன்; மறுபடியும் திறவுகோல் கொத்தை சற்று குலுக்கிப் பார்; சாப்பாட்டை அப்படியே ஒரு வாயில்போட்டுக் கொள்ளும் குண்டோதரன் போல் வந்து நிற்கிறேன்." என்று வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டே சுற்றி நோக்கி படுக்கை முதலிய சாமான்களைச் சுட்டிக் காட்டி "எனக்கு அவ்வளவு பசியானாலும் இவைகளை சாப்பிட்டுப், பழகினதில்லை. இவையெல்லாம் என்னால் ஜீரணமாக்கமுடியாது" என்று பரிகசிக்கவே,— கமலா கொல்லென்று சிரித்தாள்.

சிரிப்பு அடங்கியபின் "இன்னும் "கொஞ்ச நிமிஷங் கூட காத்திருக்க முடியாதா? சற்றுமுன் சூரியாஸ்தமனத்தைப் பார்த்து நின்றபோது பசிதாகம் ஒன்றும் தங்களுக்கு இருப்பதாகத் தோன்றவில்லையே! நான் கூப்பிட்ட வுடனே திடீரென எங்கிருந்து வந்தது இந்தப் பசி? சற்று இருங்கள், ஒரு நிமிஷத்திற்குள் சாப்பாடு போடுகிறேன்."

"சரி; தாமதியாதே, அப்புறம் நான் படுக்கை துப்பட்டி எல்லாவற்றையும் விழுங்கி விட்டேன் என்றால் உன்மேல் குற்றம்" என்றான் இராமேசன்.

இவ்விதம் திரும்ப அதே பரிகாச வார்த்தையை பிரயோகித்த போதிலும் மறுபடியும் கமலாவால் சிரியாதிருக்க முடியவில்லை; சாதம் எடுத்து வரச் சென்றபோது அவள் சிரித்த சிரிப்பு அந்த அறை முழுவதும் கலீர் என்று ஒலித்தது; ஆனாலும், அவள் முகம் திரும்பியதும், இராமேசன் மேற்கொண்டிருந்த உத்சாகம் மறைந்து பழையபடி துக்கத்தில் அவன் மனது ஆழ்ந்தது.

கமலா இலைகளால் மூடப்பட்ட தட்டுடன் சீக்கிரமாகவே திரும்ப வந்தாள்; அதை கீழே வைத்துவிட்டு புடவைத் தலைப்பால் தரையைத் தட்டிச் சுத்தமாக்கினாள்.

"இதென்ன காரியம்" என்றான் இராமேசன். "நான்வேறு துணி கட்டிக் கொள்ளப் போகிறேன், அதனால் பாதகமில்லை" என்று சொல்லிக்கொண்டே, இலைகளைப் பரத்தி லுச்சி (பொரித்த கோதுமை ரொட்டி) களை எடுத்து வைத்து கறியும் பரிமாறினாள். "என்ன ஆச்சரியம் இது? லுச்சி எங்கே கிடைத்தது உனக்கு" என்று கேட்டான் இராமேசன்.

கமலாவுக்கு உடனே அந்த இரகசியத்தை வெளியிட இஷ்டமில்லை; "நீங்களே சொல்லுங்கள் பார்ப்போம்" என்றாள்.

சரி என்று உடன்பட்டு, இராமேசன் லுச்சி எங்கிருந்து வந்திருக்கக் கூடும் என்று பல விதமாய் தப்புக் காரணங்களைச் சொல்லவே, கமலா சற்று கோபமடைந்தாள்; கடைசியில்—"அரேபியன் நைட்ஸ்" கதைகளில் சொல்லப்பட்ட விசித்திர விளக்குடைய அல்லாதீன் ஒரு பூதத்தை அனுப்பி லுச்சிஸ்தானத்தி னின்றும் அவைகளைச் சுடச்சுடக் கொண்டுவரச் செய்தான் என்று சொன்னதும், அவள் அதைப் பொறுக்க முடியாமல் கோபித்துக்கொண்டு "இப்படி யெல்லாம் பிதற்றினால் அப்புறம் நான் வாஸ்தவத்தைச் சொல்லவே மாட்டேன்" என்று பயமுறுத்தினாள்.

"நான் என்ன செய்வேன்; எனக்குத்தெரியவில்லையே; நீ தான் சொல்லி விடு எங்கிருந்து வந்தது என்று; நடுஆற்றிலிருக்கும் நீ எப்படி லுச்சிகள் தயாரித்தாய் என்பது எனக்கு விளங்கவில்லை; வாய்க்கு நன்றாய் இருக்கின்றன என்பது மட்டும் விளங்குகிறது" என்று இந்த இரகசியத்தைக் கேட்டறிய வேண்டுமென்ற குதூகலத்தை விட தனக்கு பசியே அதிகரித்திருக்கிறது என்று காட்டுவான் போல் சாப்பிட ஆரம்பித்தான்.

நடந்த சமாசாரம் என்னவென்றால்; கப்பல் இப்படி மணலில் சிக்கிக்கொண்டதும், கமலா உமேசனை அனுப்பி பக்கத்தூருக்குப்போய் சாமான்களை வாங்கி வரச் சொன்னாள்; அவனை இராமேசன் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு போய் விட்ட போது அவளுடைய சொந்தச் செலவிற்கு என்று கொடுத்திருந்த ரூபாய்களில் கொஞ்சம் மீத்திருந்

தாள்; அதைக்கொண்டு மாவும் நெய்யும் வாங்கி வரச் சொன்னாள்; அவற்றை வாங்கி வந்தபின் உமேசனைப்பார்த்து! "நீ என்ன செய்யப்போகிறாய்" என்று கேட்டபோது அவன் "அம்மா, இந்த ஊரிலே ஒரு இடையன் வீட்டில் நல்ல கட்டித் தயிர் வைத்துக் கொண்டிருக்கிறான்; நம்மிடமோ வாழைப்பழங்கள் இருக்கின்றன; அரைஅணுவுக்கு கொஞ்சம் அரிசிமா வாங்கி வந்தால் மாவைக்கரைத்து சாப்பிடுவேன்" என்றான் உமேசன்; கமலா அவனுடைய ருசிப்படி சாப்பிடட்டும் என்று "பையா, காசு பாக்கியிருக்கிறதா?" என்று கேட்டாள். "இல்லை, அம்மா" என்ன செய்வது? இராமேசனிடம் போய்க் கேட்கத் தயங்கினாள் கமலா; சற்று யோசித்து "சரி, இன்று உன்னிஷ்டப்படி மாக்கரைத்துச் சாப்பிட முடியாதென்றாலும், உனக்கும் கொஞ்சம் லுச்சி தருகிறேன்" என்றாள்.

"தயிருக்கு என்ன செய்வது, அம்மா?"

"இந்தா, உமேசா, யஜமானர் சாப்பிடும் வரை சும்மா இரு; அப்போது கேட்கலாம் கடை சாமான் வாங்க ரூபாய் வேண்டுமென்று" என்று சொல்லி யிருந்தாள்.

அதின்படி, இராமேசன் பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது தலையைச் சொரிந்து கொண்டு வந்து தோன்றினான் உமேசன்; இராமேசன் அவனைப் பார்த்ததும் "கடைசாமான் வாங்கிவருவதற்குப் பணம் வேண்டும், அம்மா" என்று முணுமுணுத்தான்.

"காசில்லாமல் காய்க்காது" என்று அப்போது தான் இராமேசனுக்கு புலப்பட்டது; அவனிடம் அல்லாதீன் விளக்கு ஒன்றும் இல்லை யல்லவா?

"உன்னிடம் பணமில்லையே கமலா?"

இல்லை என்று கமலா தெரிவிக்கவே, சாப்பாடு முடிந்ததும் இராமேசன் தன் சிறு பணப்பெட்டியை எடுத்து அவளிடம் கொடுத்து "இதில் பணம் நகை முதலியவற்றை வைத்துக்கொள்" என்று சொன்னான்.

இவ்விதம் குடித்தனப் பொறுப்பு முழுவதையும் கமலாவிடம் சுமத்த வேண்டி யிருக்கிறதே என்று இராமேசன் அஸ்த மனமாகி இருள் சூழ்வதைக் கவனிப்பவன் போல் கப்பலில் மேல் புறத்தில் நின்றுகொண்டு மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தான்.

உமேசன் மாவும் தயிரும் வாங்கிவந்து மாக்கரைத்து பழங்களுடன் சாப்பிட்டான்; கமலா அவனருகில் உட்கார்ந்து அவனுடைய கதையையெல்லாம் கேட்டறிந்தாள்.

மாற்றாந்தாய் அதிகாரத்திலிருந்த தன் வீட்டில் கவனிப்பார் அற்று இருந்ததால் தான் காசிக்குப் போவதாய் ஓடி வந்ததாகவும் அங்கே தன் சொந்தத் தாயாரின் உறவினருள் ஒருவர் இருப்பதாகவும் உமேசன் சொன்னான்.

"ஆனால், அம்மா, உங்களோடுகூட இருக்கலாமென்று சொன்னீர்களானால் நான் வேறு எங்குமே போகமாட்டேன்" என்று சொல்லி முடித்தான் உமேசன்.

கபடமற்று தன்னை அம்மா என்று அவன் அழைத்தது கமலாவின் மனத்துள் பதுங்கிக்கிடந்த தாய்த் தன்மையை வெளியே ததும்பச் செய்தது.

"சரி உமேசா, எங்களோடேயே இரு" என்று சொல்லி அவனை சந்தோஷப்படுத்தினாள் கமலா.

தக்ஷிணமித்திரன்

இதற்கு முன் (South Indian Mail) என்ற பெயருடன் இங்கிலீஷில் பிரசுரம் செய்யப்பட்டு வந்த பத்திரிகை சென்ற மாசிமீ முதல் தமிழில் தக்ஷிணமித்திரன் என்ற பெயருடன் பிரதி திங்கட்கிழமையும் மதுரையில் பிரசுரம் செய்யப்படுகிறது. மதுரை கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராயிருந்த ஸ்ரீமான் ஈ. அருணாசலமய்யர் ஆசிரியராவர்.

ஸ்திரிகளுக்காக நவீன நாவல் பத்திராதிபரால் எழுதப்பட்டு வருகிறது.

இதில் ராஜீய பொதுஜன நலம், கல்வி, சிற்பம் முதலிய எல்லா விஷயங்களைப் பற்றியும் அரிய வியாசங்களும் தென் இந்திய சரித்திர ஆராய்ச்சி கண்ணோட்டம் முதலிய விஷயங்களும் பலவூர் சங்கதிகளும் பிரசுரமாகும்.

சந்தா விபரம்

உள்ளூர் வருஷம் 1-க்கு ரூ. 5—0—0
வெளியூர் ,, ,, ,, 6—0—0
பினங்கு முதலிய அந்நிய நாடுகளுக்கு வருஷம் 1-க்கு ரூ. 8—0—0

மற்ற எல்லா விவரங்களும் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மனேஜர்
தக்ஷிணமித்திரன்
மதுரை.

நீங்கள்

உயர்ந்த பட்டுப் பட்டாடைகள் சகாயவிலையிலும் விலைக்குத்தக்கபொருள்களாகவும் அடைய விரும்புகிறீர்களா? அப்படியானால், சென்ற 7 வருஷகாலமாக மிக கியாதியோடும் நாணயமாகவும், நடந்துவரும் காசி பாலாஜி அண்டு கம்பெனியாருக்கு எழுத மறந்து விடாதீர்கள். உடனே விலைவிபர ஜாப்தாவுக்கு எழுதுங்கள். 1923ம் வருஷ காலண்டர் ½ அணா ஸ்டாம்பு அனுப்புவோர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

பாலாஜி அண்டு கோ,
காசி.

Branch :—
336, தம்பு செட்டித் தெரு,
சென்னை.

BALAJEE & Co.,
Silk Emporium
BENARES CITY.
Tel:—BALAJEE.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினுல், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனும்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10	கஜம்	×25"	ரூ 2½	முதல்	ரூ 3	வரை
,, 2.	12	,,	×27"	,, 4	,,	6	,,
,, 3.	16	,,	×34"	,, 6	,,	9	,,
,, 4.	18	,,	×36"	,, 8	,,	12	,,
,, 5.	20	,,	×44"	,, 11	,,	13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: **'Shree'**

கதர் சேலைகள் முதலியன.

10	கஜம்	× 45"	ரூ 4½	முதல்	ரூ 6	வரை
9½	,,	× 40"	,, 3	,,	5	,,
3	,,	× 1½ கஜ	,, 2	,,	3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக்கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment. We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

Beautifully illustrated large descriptive catalogue free on application. (Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, POONA.

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராகச் சேர்ந்து நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ1000 பாலிஸிக்கு ரூ15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
Manager.

K. S. MUTHIAH & Co.,

Silk House, Benares City.
Branches **:—MADRAS & TINNEVELLY.**

எங்களிடம் சகல விதமான பட்டு பீதாம்பர புடவைகள், நாகரீகமான புதிய மாதிரி புடவைகள் (நவீன கலர்களில்) ரவிக்கை குட்டைகள், வெண்பட்டு தினுசுகள், நார்மடி தினுசுகள், ருத்திராக்ஷ மாலைகள், முதலிய சகல தினுசுகளும் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். உடனே எங்கள் கேட்லாக்கை தருவித்து பாருங்கள்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
சில்க் ஹவுஸ், காசி.

பிராஞ்சு:—தபாற் பெட்டி 99, சென்னை.
போன் 1216 சென்னை.